PEPERIKSAAN PERCUBAAN SPM TAHUN 2019
6354/1
Kertas 1
1 ¾ jam — Satu jam Empat puluh lima minit

Tingkatan 5

# BAHASA TAMIL 1

# தமிழ்மொழி 1

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

1 Kertas soalan ini mengandungi **dua** bahagian – **Bahagian A** dan **Bahagian B**

2 Jawab **dua** soalan – **satu** soalan daripada setiap bahagian

3 Anda dikehendaki menulis nombor soalan semasa menjawab

4 Jawapan anda hendaklah ditulis dalam kertas tulis yang disediakan

Kertas soalan ini mengandungi 3 halaman bercetak

**பொதுக்கட்டளை:**

இக்கேள்வித்தாள் **பிரிவு அ**, **பிரிவு ஆ** எ**ன்னும்** இ**ரண்டு** பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கேள்வியாக **இரண்டு** கேள்விகளுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.

**பிரிவு அ** : **வழிகாட்டிக் கட்டுரை**

[**பரிந்துரைக்கப்படும் நேரம்**: 30 நிமிட**ம்**]

கீழ்க்காணும் கடிதத்தை மாற்றி **உரைநடையாக** எழுதுக

அன்புள்ள எழில்,

நீ எழுதிய கடிதங்கள் எனக்கும் சுவையாக இருந்தன. நீ வயதில் இளையவன் அஞ்சாமல் உன் கருத்தைச் சொல்கிறாய்; எழுதுகிறாய். நான் உன்னைவிட உலக அனுபவம் மிகுந்தவன்; அதனால் உலகத்தைப் பற்றிய அச்சமும் மிகுந்தவன். ஆகையால் எதையும் சொல்லவும் எழுதவும் தயங்குகிறேன்; நீ உள்ளத்தில் உணர்ந்ததைக் கொட்டுகிறாய்; நான் உணர்ச்சி இல்லாதவன்போல் நடிக்கிறேன். நீயே என்னைவிட ஒருவகையில் நல்லவன்.

தம்பி! நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது. வல்லவனாகவும் இருக்கவேண்டும் அல்லவா? நன்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு. நல்ல தன்மை மட்டும் உடையவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்துவருகிறார்கள். வல்லமை மட்டும் பெற்றவர்களும் எதிர்பாராதவகையில் நசுக்குண்டு அழிகிறார்கள். எனவே, நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப்பெற்று வாழவேண்டும்.

தம்பி! இயற்கையிலிருந்து நாம் ஒரு பெரிய பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கைப் பகுதிகளில் ஒன்றை மட்டும் போற்றுகிறவன் உருப்படியாவதில்லை. உடலை மட்டும் போற்றி உரமாக வைத்திருப்பவனுக்கு அவனுடைய உள்ளம் பகையாகி அவனைத் தீயவழியில் செலுத்திக் கெடுத்து அழிக்கிறது. உள்ளத்தை மட்டும் தூய்மையாகப் போற்றிக் காப்பாற்றுகிறவனுடைய உடல் பல நோய்க் கிருமிகளுக்கு இடம் கொடுத்து அவனுடைய உள்ளத்தில் அமைதியைக் கெடுத்து அல்லல் படுகிறது. ஆகவே, உடலும், உள்ளம் இரண்டையும் உரமாகவும் தூய்மையாகவும் காப்பதே கடமையாகும்.

அன்புள்ள அண்ணன் ,
வளவன்
----------------

(டாக்டர் மு.வ – தம்பிக்கு எடுத்தாளப்பட்டது)

[30புள்ளி]

## பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை

[**பரிந்துரைக்கப்படும் நேரம்** : 1 **மணி** 15**நிமிடம்**]

கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப்** பற்றி **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவம் எழுதுக**.**

1. தமிழர் கடமை
   இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை எழுதுக

2. திறன்பேசியின் வருகையே இன்றைய இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் ஆர்வம் காட்டுவதைத் தடுக்கின்றது.
   இத்தலைப்பை **வாதித்து** ஒரு கட்டுரை எழுதுக

3. வீட்டில் பிராணிகளை வளர்ப்பதால் ஏற்படும் விளைவுகள்.
   இத்தலைப்பை **விவாதித்து** ஒரு கட்டுரை எழுதுக.

4. தூய்மையைப் பேணுவதில் மாணவர்களின் பங்கு.
   இத்தலைப்பில் பள்ளிச் சபைக்கூடலில் நீ ஆற்றவிருக்கும் **உரையை** எழுதுக.

5. உன் உறவினர் வெளிநாட்டில் தன் உயர்கல்வியை முடித்த பின், ஐந்தாண்டுகள் கழித்து நாடு திரும்பியுள்ளார். அவருக்கான வரவேற்பு விழாவில் கலந்து கொண்டிருக்கிறாய்.
   அச்சூழலை **வருணித்து** எழுதுக.

6. உண்மை
   இதனைக் **கருப்பொருளாகக்** கொண்டு **சிறுகதை** அல்லது **ஓரங்க நாடகம்** எழுதுக.

[70புள்ளி]

**தேர்வுத்தாள் முற்றுப்பெற்றது**

KERTAS PEPERIKSAAN TAMAT